தோற்றம் : 1971 அறிந்தேற்பு : 341/1980

# தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகம்

(Recognized by the Govt. of Tamilnadu G.O. No. 341, Dt. 22-03-1980)

## TAMILNADU GOVERNMENT COLLEGE TEACHER'S ASSOCIATION

TNGCTA நரசிங்கம் நிலையம், 2, சைடோஜி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600 005. Ph : 28516573, Telefax : 28414354

**முனைவர் இரா.வெங்கடாசலம்**
தலைவர்

**முனைவர் சி.திருச்செல்வம்**
பொதுச்செயலர்

**முனைவர் தி.அறிவுடைநம்பி**
**முனைவர் உஷா ரகோத்தம்**
துணைத் தலைவர்கள்

**பேரா.இரா.நிர்மல்குமார் இராச பிரகாஷ்**
**முனைவர் ச.காமாட்சி**
இணைச் செயலர்கள்

சுற்றறிக்கை எண். 5/2015 நாள் : 23-09-2015

இனிய தோழர்களே, தோழியரே!

வணக்கம். நமது இயக்கத்தின் உயர் மட்டக்குழுக் கூட்டம் 19-09-2015 அன்று சென்னையில் நமது தலைமை அலுவலகத்தில் மாநிலத் தலைவர் முனைவர் இரா.வெங்கடாசலம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

**தலைவர் உரை**

தலைவர் தனது உரையில், கோரிக்கைகளின் இன்றைய நிலை குறித்தும் தொடர் நடவடிக்கைகள் குறித்தும் விவரித்தார். 2006-க்குப் பின் பணியில் சேர்ந்த ஆசிரியர்களுக்கு AGP 7000 வழங்குவதற்காக அரசு ஆணை வழங்கப்பட்டும் அதற்குரிய பணப்பயன் வழங்கப்படவில்லை. எனவே, அதை உடனடியாக வழங்க ஆவண செய்ய அமைச்சர் அவர்களைச் சந்தித்துக் கடிதம் கொடுக்கப்பட்டுள்ளதாகவும், தேர்தலை விரைந்து நடத்துவது, சென்னையில் ஒருநாள் கருத்தரங்கம் நடத்துவது பற்றியும் விளக்கினார்.

**பொதுச் செயலர் அறிக்கை**

நிலுவையில் உள்ள கோரிக்கைகள், JAC இயக்க நடவடிக்கைகள் குறித்தும் அதைத் தொடர்ந்து கோரிக்கைகள் தொடர்பாக JAC பொறுப்பாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திட 07-10-2015 அன்று உயர்கல்வித்துறைச் செயலர் அவர்கள் அழைப்பு விடுத்துள்ளது பற்றியும் தெரிவித்தார். நமது ஆசிரியர்களின் பணியிட மாறுதலுக்கான பொதுக்கலந்தாய்வினை விரைந்து நடத்திடத் தொடர்ந்து உயர்கல்வி அமைச்சர் அவர்களிடம் வலியுறுத்தி வருவதன் அடிப்படையில் அமைச்சர் அவர்கள் விரைவில் ஆசிரியர் கலந்தாய்வு நடத்தப்படும் என்று உறுதியளித்துள்ளதாகவும் பொதுச் செயலர் தெரிவித்தார்.

**அய்பெக்டோ செய்தி**

மத்திய அரசை வலியுறுத்தி 7-வது யூ.ஜி.சி. ஊதிய நிர்ணயக்குழுவை நியமித்தல், பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்துதல் மற்றும் பல்கலைக் கழகப் பிரச்சினைகள் போன்ற கோரிக்கைகள் குறித்து அய்பெக்டோவின் அறை கூவலுக்கிணங்க மாநிலத்தில் 8 மையங்களில் குறிப்பாகப் பல்கலைக்கழகங்கள் முன்பு, மாலை நேரத்தில் தர்ணா நடத்துவது என JAC செயற்குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. எனவே நமது இயக்கத்தோழர்கள் பெரும் எண்ணிக்கையில் தர்ணா போராட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பாக நடத்திட வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நிலுவையில் உள்ள கோரிக்கையின் நிலை, மாநில ஒருநாள் கருத்தரங்கம், சங்கத் தேர்தல் நடத்துவது போன்ற செய்திகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டு இறுதியில் பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

**கருத்தரங்கம் பற்றிய செய்திகள்**

1. நமது இயக்கத்தில் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள மகிழ்ச்சியான சூழலில் உறுப்பினர்களை ஒன்று சேர்க்கின்ற, சந்திக்கின்ற ஒரு தளமாக இக்கருத்தரங்கம் அமையும் என்ற உணர்வோடு "அனைவருக்கும் உயர்கல்வி" என்ற தலைப்பில் சென்னையில் 12-10-2015 அன்று ஒரு நாள் மாநிலக் கருத்தரங்கம் நடத்துவது என முடிவு செய்யப்பட்டுள்ளது.
2. கருத்தரங்கத்தில் கட்டுரை சமர்ப்பிக்க விரும்பும் பேராசிரியர்கள் கட்டுரையை tngctaconference@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு English Font : Times New Roman. தமிழில் கட்டுரை அனுப்புபவர்கள் அதற்குரிய தமிழ் எழுத்துருவையும் (Font) இணைத்து 09-10-2015 க்கு முன்னர் குறித்த காலத்தில் அனுப்பி வைக்கவும்.

3. இக்கருத்தரங்கிற்கு ஒருங்கிணைப்பாளராக மாநிலத்தலைவர் முனைவர் இரா.வெங்கடாசலம் அவர்களும் கருத்தரங்கச் செயலராக சென்னை செங்கை மண்டலச் செயலர் முனைவர் சி.ஜோதி வெங்கடேஸ்வரன் அவர்களும் கருத்தரங்கப் பொருளாளராக மாநில இணைச் செயலர் மற்றும் பொருளர் (பொ.) முனைவர் காமாட்சி ஆகியோர் பொறுப்பாளர்களாகச் செயல்படுவார்கள் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

4. இக்கருத்தரங்கை நடத்துவதற்கு ஏற்படும் செலவினங்கள் கணக்கிடப்பட்டு அதன் அடிப்படையில் நமது இயக்க உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ரூ.300/- கருத்தரங்க நிதியாகச் செலுத்த வேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

5. கருத்தரங்கம் நடத்துவது தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொள்ளும்படி சென்னை-செங்கை மண்டலத்திடம் ஒப்படைப்பது என முடிவெடுக்கப்பட்டு அதனடிப்படையில் பல்வேறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு பொறுப்புகள் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

**சங்கத் தேர்தல் நடத்துவது பற்றிய செய்திகள்**

1. திருப்பூர் LRG மகளிர் கல்லூரியில் நடைபெற்ற மாநிலச் செயற்குழுவில் எடுக்கப்பட்ட முடிவின்படி கருத்தரங்கம் நடத்திய பிறகு அன்று மாலையில் விதித்திருத்தம் குறித்து பொதுக்குழுவைக் கூட்டப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால் கருத்தரங்கம் நடைபெற இன்னும் சில நாட்களே உள்ளன. இந்நிலையில் விதித்திருத்தம் செய்வது குறித்த நடவடிக்கையை மேற்கொள்வதற்கு அதிக நாட்கள் தேவைப்படுவதால் தேர்தலை அறிவிக்கப்பட்ட குறித்த நேரத்தில் நடத்துவது கடினமான செயலாகும். எனவே இச்சூழ்நிலையில் பொதுக்குழுவைக் கூட்டுவது மற்றும் விதித்திருத்தம் செய்வது, ஒத்தி வைக்கப்பட்டுத் தேர்தல் நடத்துவது குறித்த தேதியை முடிவு செய்வதற்குச் சிறப்பு மாநிலச் செயற்குழுவை நடத்துவது என முடிவெடுக்கப்பட்டுள்ளது.

2. ஒவ்வொரு கிளையும் சங்கத் தேர்தல் நடத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள நிதிகள் அனைத்தையும் 07-10-2015-க்குள் செலுத்தி அத்துடன் நிதியைச் செலுத்திய உறுப்பினர் பட்டியலையும் தலைமையின் ஒப்புதலுக்காக அனுப்பிவைக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

3. நமது சங்கக் கட்டிடத்தில் இயங்கி வரும் ஆழ்குழாய்க் கிணறு சேதமடைந்துள்ளதால் புதிய ஆழ்குழாய்க் கிணறு அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**<u>கிளை / மண்டல செயலர் கவனத்திற்கு</u>**

1) கருத்தரங்கம் நடத்துவதற்கு இன்னும் சில நாட்களே உள்ளதால் அப்பணியை மேற்கொள்வதற்கு வசதியாக கருத்தரங்க நிதியைப் பெற்று கருத்தரங்கப் பொருளருக்கு விரைந்து அனுப்பி வைக்கவும்.

2) கிளை, மண்டலம் மற்றும் மாநிலத் தேர்தலை அறிவிக்கப்பட்ட நாட்களுக்குள் நடத்துவதற்கு உதவியாக நிர்ணயிக்கப்பட்ட நிதிகள் முழுவதும் கிளை, மண்டலம் மற்றும் மாநிலத்திற்கு தாமதமின்றிச் செலுத்தவும்.

3) ஆண்டுச் சந்தா மற்றும் கட்டிட நிதியைச் செலுத்துபவர்கள் சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள பாரத ஸ்டேட் வங்கியில் கீழ்க்கண்ட வங்கிக் கணக்கில் செலுத்தி அதன் நகல் மற்றும் நிதி செலுத்திய உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியலைத் தலைமைக்கு அனுப்பி வைக்கவும்.

4) SBI திருவல்லிக்கேணி, சென்னை. IFSC Code : SBIN0000249 Branch Code : 000249

**சந்தா செலுத்துவதற்கு** :
TNGCTA வங்கிக் கணக்கு எண் : 10232923497

**கட்டிட நிதி செலுத்துவதற்கு** :
TNGCTA வங்கிக் கணக்கு எண் : 31160558450
TNGCTA New Building Fund Account

5) மாநிலக் கருத்தரங்கத்திற்கான நிதியினைச் செலுத்துவதற்குத் தனியாக ஒரு கணக்குத் தொடங்கப்பட்டு அலைபேசி மூலம் குறுஞ்செய்தியில் வங்கிக் கணக்கு எண் தெரிவிக்கப்படும்.

**நடைபெற உள்ள நமது மாநிலக் கருத்தரங்கம் நமது இயக்கத்தின் விழா!**
**அனைவரும் பெருந்திரளாகப் பங்கேற்கத் திட்டமிடுவீர்!**
**இயக்க ஒற்றுமை மட்டுமே நமது கோரிக்கைகளையும் உரிமைகளையும் வென்றெடுக்க உதவும்.**
**ஒன்றுபடுவோம்! வெற்றி பெறுவோம்!!**

தோழமையுடன்,

சென்னை - 5
23-09-2015

**(சி.திருச்செல்வம்)**
பொதுச்செயலர்.